SLM-05

# "தொடக்கநிலை ஆசிரியர்களின் கல்வி சார்ந்த திறன்களைக் கல்வி இதழ்கள் வாயிலாக மேம்படுத்துதல்"


செயலாராய்ச்சியாளர்

மூ.ஜெயமணி

விரிவுரையாளர்

உத்தமசோழபுரம் சேலம்


2024- 25


மாநிலக்கல்வியியல்ஆராய்ச்சிமற்றும்பயிற்சிநிறுவனம்

சென்னை- 600 006

## பொருளடக்கம்


| வரிசை எண் | தலைப்பு |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2. | பிரச்சனையை அடையாளம் காணல் |
| .3 | ஆய்வின் தேவை |
| 4 | பிரச்சனைக்கானவிளக்கம் |
| 5. | ஆய்வின் நோக்கம் |
| 6. | பிரச்சனைக்கான உத்தேசமான காரணங்கள் |
| 7. | செயலாய்வு கருதுகோள் |
| 8. | இடைவினைநிகழ்வு |
| 9. | செயலாய்வுமுறை |
| 9.1 | செயலாய்வு மாதிரி |
| 9.2 | செயலாய்வுவடிவம் |
| 9.3 | செயலாய்வு கருவிகள் |
| 10. | பகுப்பாய்வு |
| 11 | கண்டுபிடிப்புகள் |
| 11.1 | செயல்படுத்தலுக்கான பரிந்துரைகள் |
| 12. | முடிவுரை |
| 13. | பார்வைநூல்கள் |
| 14. | இணைப்புகள் |

**முன்னுரை**

தொடக்கநிலை (primary level)ஆசிரியர்கள், மாணவர்களின்அடிப்படைக் கல்வி வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர் அவர்களின் கல்விசார்ந்த .

திறன்கள் மேம்பட்ட அளவில், இருந்தால்மட்டுமேமாணவர்கள் தரமான கல்வியைப் பெற முடியும்.கல்வித் துறையில் தொடர்ந்து நடக்கும் மாற்றங்களைக் கவனித்து, தங்களைப் புதுப்பித்துக்கொள்வது மிகவும் அவசியம்அத்தகையதேவையைப் பூர்த்தி செய்யும் விதமாக கல்வி இதழ்கள்அமைந்துள்ளன.

மேலும்திறன் என்பது ஒரு செயலில் ஒரு நபருக்கு இருக்கும் திறமை அல்லது ஆற்றலைக் குறிக்கும் .அவை கல்வி , பயிற்சி, அனுபவம் வாயிலாக வளர்ச்சி பெற்று மேம்படுத்தப்படுகிறது . அத்திறன்கள் பல வகைப்படும் , குறிப்பாக கல்வி சார்ந்த திறன்கள்என்பது மாணவர்கள் கல்வி கற்பதன் மூலம் பெறும் பலவிதமான திறன்களைக் குறிக்கிறது.இவற்றில் அறிவாற்றல் திறன்கள் , சமூக திறன்கள், மென்திறன்கள், வாழ்வியல் திறன்கள் , மற்றும் மொழித்திறன்கள் , அடங்கும்.அத்தகைய திறன்களான , மொழித்திறன்களில், ஒன்றானபடித்தல் திறனை கல்வி இதழ்கள் வாயிலாக எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றி இச்செயலாராய்ச்சியில் காண்போம்.

**பிரச்சனையை அடையாளம்காணல்**

சேலம் மாவட்டம்,எடப்பாடி ஒன்றியத்தில்உள்ளபள்ளிகளைப்பார்வையிட்ட போது தொடக்கநிலை பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் கல்விசார் புதிய நுட்பங்கள் மற்றும் தகவல்களைப் பெறும் வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றனர்.அவற்றைமேம்படுத்தும்வகையில் தொடக்கநிலை ஆசிரியர்களின் கல்வி சார்ந்த திறன்களைக் கல்வி இதழ்கள் வாயிலாக மேம்படுத்துதல்"தலைப்புதெரிவுசெய்யப்பட்டது.

**ஆய்வின் தேவை**

ஆசிரியர்கள் கல்வி இதழ்களைத்தொடர்ந்துமுழுமையாகபயன்படுத்தச் செய்வதன் மூலம் புதிய தகவல்களையும் கற்றல் நுட்பங்களையும் அறிந்து தங்களது கற்பிக்கும்திறனில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்

மேலும்தகவல் தொடர்பு சாதனங்களில் ஒன்று மொழி , தகவல் தொடர்பின் போது அத்தகைய மொழியைத் தெளிவாகவும் , திறம்படவும் நாம் கையாள வேண்டும். மொழியைத் திறம்பட கையாளுவதற்கு படிக்கும்பழக்கத்தைமேம்படுத்திக்கொள்ளவேண்டும். மேம்பாடடைய அன்றாடம் கல்விஇதழ்களைப் படிக்க வேண்டும் . படிக்கும் பொழுது திறன்கள் மேம்படும் . மேலும், தொடக்க நிலை ஆசிரியர்களிடம் கல்வி சார்ந்த திறன்களைக் கல்வி இதழ்கள் வாயிலாக மேம்படுத்துதல் பொருட்டு இத்தலைப்பு செயலாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது .

**பிரச்சனைக்கானவிளக்கம்**

கல்வி இதழ்கள் வாயிலாக தொடக்கநிலை ஆசிரியர்களின் கல்வி சார்ந்த திறன்களை மேம்படுத்துதல்.

**ஆய்வின் நோக்கம்**

- சரளமாகபடிக்கும்திறனைமேம்படுத்திக்கொள்ளல்
- பிழையறஎழுதும்திறனைமேம்படுத்திக்கொள்ளல்
- நாநெகிழ், நாபிறழ்பயிற்சிபெறல்.
- கல்வி இதழ்கள், ஆசிரியர்களின் கல்வி நுட்பங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை அறிதல்.
- ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களைஅறிதல்.
- கல்விசார்ந்ததிறன்களை மேம்படுத்திக்கொள்ளல்

**பிரச்சனைக்கான உத்தேசமான காரணங்கள்**

பெரும்பாலான பள்ளிகளில்கல்விசார்ந்தஇதழ்கள்பயன்பாடுசற்றுகுறைந்துகாணப்பட்டதுஎனகண்

டறியப்பட்டது.அவ்விதழ்களின்பயன்பாட்டைமேம்படுத்துவதற்காகஇத்தலைப்புமேற்கொள்ளப்பட்டது.

**செயலாய்வு கருதுகோள்**

கல்விசார்ந்தஇதழ்களைத்தொடர்ந்துபடிப்பதன்மூலம்கல்விசார்ந்ததிறன்கள் மேம்படும்.

**இடைவினைநிகழ்வு (பணிமனை)**

ஆசிரியர்களுக்குஒருநாள்பணிமனைமேற்கொள்ளப்பட்டது, அப்பணிமனையில்முன்தேர்வுமற்றும்பின்தேர்வில்கல்விஇதழ்கள்சார்ந்துபதினைந்துபலவுள்தெரிவுவினாக்கள்கேட்கப்பட்டுபணிமனைமேற்கொள்ளப்பட்டது.

**செயலாய்வுமுறை**

- சுயகற்றல்முறை
- குழுகற்றல்முறை
- கலந்துரையாடல்முறை

**செயலாய்வு மாதிரி**

சேலம்மாவட்டம், எடப்பாடிஒன்றியத்தில்பணிபுரியும் தொடக்கநிலை(இருபது)ஆசிரியர்கள்.

**செயலாய்வுவடிவம்**

முன்தேர்வு , பணிமனை, பின் தேர்வு.

**செயலாய்வு கருவிகள்**

முன்தேர்வுமற்றும்பின் தேர்வில் 15 வினாக்கள்கேட்கப்பட்டு.அவைசோதிக்கப்பட்டன.

**செயலாய்வுதரவு சேகரிப்பு**

முன்தேர்வு, பின் தேர்வுஅடிப்படையில்தரவுகள்சேகரிக்கப்பட்டன.

**(பணிமனை) நிகழ்வுகள்பின்வருமாறு**

**கல்வி சார்ந்த திறன்கள்:**

- **அறிவாற்றல் திறன்கள் ( Cognitive Skills):**இத்திறனில் வாசித்தல் , எழுதுதல், கணக்கிடுதல், ஆய்வு செய்தல் , சிக்கல் தீர்த்தல் போன்ற திறன்கள் அடங்கும்.

- **சமூக திறன்கள் ( Social Skills):**இத்திறனில் குழுவாகப் பணிபுரிதல் , மற்றவர்களுடன் இணைந்து செயல்படுதல்,கருத்துகளை வெளிப்படுத்துதல் போன்ற திறன்கள் அடங்கும்.
- **மென்திறன்கள் (Soft Skills):**இத்திறனில் தகவல் தொடர்பு, தலைமைப் பண்பு, ஆளுமை, பொறுப்புணர்வுமனப்பாங்கு போன்ற திறன்கள் அடங்கும்.
- **படைப்பாற்றல் திறன்கள் ( Creative Skills):**இத்திறனில் புதுமையான படைப்புகளைஉருவாக்குதல், கலை மற்றும் தொழில்நுட்ப திறன்கள் , தனித்துவமான சிந்தனைகள் போன்ற திறன்கள் அடங்கும்.
- **விமர்சன சிந்தனை திறன்கள் ( Critical Thinking Skills):**இத்திறனில் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல் , முடிவுகளை எடுக்கும் திறன் , கேள்விகளை எழுப்புதல் போன்ற திறன்கள் அடங்கும்.
- **தகவல் தொடர்பு திறன்கள் ( Communication Skills):**இத்திறனில் எழுத்து மற்றும் பேச்சு மொழி , உடன்பாடு, காட்சி ஊடகங்கள் போன்றவற்றை பயன்படுத்துதல் போன்ற திறன்கள் அடங்கும்.
- **வாழ்வியல் திறன்கள் ( Life Skills):**இத்திறனில் மன அழுத்தம் , சுய மேலாண்மை, சிக்கல் தீர்த்தல் போன்ற திறன்கள் அடங்கும்.
- **மொழித் திறன்கள்** ; இத்திறன்களில் உயர் நிலைத்திறன்கள் (கவிதை, கட்டுரை, கதை) அடிப்படைத்திறன்கள் , படைபாற்றல் திறன் , கேட்டல் திறன், பேசுதல் திறன் , படித்தல் திறன் , எழுதுதல் திறன்கள் , போன்ற திறன்கள் அடங்கும்.

மேழும் கல்வி இதழ்கள் மூலம் படைப்பாற்றல் திறன்கள் மற்றும் தகவல் தொடர்புத் திறன்களை வளர்ப்பதற்கு , இதழில் உள்ள கட்டுரைகள் , கதைகள் படக்கதைகள், படங்கள் மற்றும் பிற ஊடகங்களை வாசிப்பதன் மூலம் புதிய கருத்துகளைக் கற்றுக்கொள்ளலாம்.அதோடு , தங்கள் கருத்துகளை எழுதுவதன் மூலமும், இதர மாணவர்களுடன் விவாதிப்பதன் மூலமும் தகவல் தொடர்பு திறன்களை மேம்படுத்திக்கொள்ளலாம்.

**இதழ்களின் வகைகள்**

இதழ்களில் இடம் பெற்றிருக்கும் செய்திகள் , படைப்புகள் அடிப்படையில்இதழ்களைப் பல வகைகளில் பிரிக்கலாம்.

- இலக்கிய இதழ்,அரசியல் இதழ்,கவிதை இதழ், சிறுவர் இதழ், அறிவியல் இதழ், மருத்துவ இதழ், கல்வி இதழ், பெண்கள் இதழ், தொழில் இதழ், வணிக இதழ், விளையாட்டு இதழ், செய்தி இதழ், சோதிட இதழ், சமய இதழ், திரைப்பட இதழ், புலனாய்வு இதழ், புதின இதழ், பொழுதுபோக்கு இதழ், இசை இதழ்,
- கல்வி இதழ்கள்– என்பது கல்வி சார்ந்த அமைப்புகளோ, ஆசிரியர்களோ, உயர் கல்வி நிறுவனங்களோ வெளியிடுபவை.

**கல்வி இதழ்கள் எவ்வாறு உதவும்:**

- **பல்வேறு பல்நோக்குத் தகவல்கள்:** கல்வி இதழ்கள் பல்நோக்குத் தகவல்களைக் கொடுக்கின்றன.
- **புதிய கருத்துகளைக் கற்றல்:** பல புதிய கருத்துகளைக் கற்கவும் , விவாதிக்கவும் இதழ்கள் உதவுகின்றன.
- **விமர்சன சிந்தனை:** கட்டுரைகளை வாசிப்பதன் மூலம் , விமர்சன சிந்தனைத்திறன் வளர்கிறது.
- **தகவல் தொடர்பு திறன்கள்:** விவாதங்களில் பங்கேற்று , கருத்துகளை வெளிப்படுத்துவதன் மூலம், தகவல் தொடர்பு திறன்கள் வளர்கிறது.

**கல்வி இதழ்களின் நன்மைகள்**

- குறிப்பிட்ட பாடங்கள் மற்றும் கற்பித்தல் முறைகள் குறித்த புதுப்பிக்கப்பட்ட நுண்ணறிவு மற்றும் அறிவை ஆசிரியர்களுக்கு வழங்குதல்
- மாணவர்களின் ஈடுபாடு மற்றும் எழுத்தறிவு திறன்களை மேம்படுத்துதல் , பாரம்பரிய கற்பித்தல் பொருட்களுக்கு ஒரு துணை வழங்குதல்
- ஆசிரியர்களிடையே தொடர்ச்சியான கற்றல் மற்றும் தொழில்முறை வளர்ச்சியின் கலாச்சாரத்தை வளர்ப்பது
- கற்பித்தலை ஆதரிக்க, ஆசிரியர் பதிப்புகள் மற்றும் ஊடாடும் உள்ளடக்கம் போன்ற டிஜிட்டல் பதிப்புகள் மற்றும் ஆன்லைன் வளங்கள்.

- வகுப்பறை நூலகங்களில் பத்திரிக்கைகளை ஆராய மாணவர்களை ஊக்குவிக்கவும், சுய கற்றல் மற்றும் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும்உதவுகின்றன.
- **புதுமையான கற்பித்தல் முறைகள்:** கல்வி இதழ்கள் , ஆசிரியர்களுக்கு புதுமையான கற்பித்தல் முறைகள் , பாடத்திட்ட மாற்றங்கள் மற்றும் கல்வி சார்ந்த ஆராய்ச்சிகள் பற்றிய தகவல்களை வழங்குகின்றன.
- **கல்வி சார்ந்த தகவல்கள்:** கல்வி இதழ்கள் , கல்வி கொள்கைகள் , பாடத்திட்டங்கள், மதிப்பீட்டு முறைகள் மற்றும் கல்வி சார்ந்த பிற முக்கிய தகவல்களை ஆசிரியர்களுக்கு வழங்குகின்றன.
- **திறமைகளை மேம்படுத்துதல்:**கல்வி இதழ்கள் , ஆசிரியர்களுக்கு தங்களது கற்பித்தல் திறன்களை மேம்படுத்துவதற்கான வழிகளை வழங்குகின்றன.
- **தொடர்பு கொள்ளுதல்:** கல்வி இதழ்கள் , ஆசிரியர்களுக்கு பிற ஆசிரியர்களுடன் தொடர்பு கொள்ளவும் , தங்கள் கருத்துகளை பகிரவும் ஒரு தளத்தை வழங்குகின்றன.
- **தொடர்ச்சியான கல்வி:** கல்வி இதழ்கள் , ஆசிரியர்கள் தங்களது தொடர்ச்சியான கல்விக்கு ஒர் ஊக்கத்தை அளிக்கின்றன.

**எப்படி கல்வி இதழ்களைப் பயன்படுத்தலாம்?**

- **கல்வி இதழ்களைப் படிக்கவும்:** ஆசிரியர்கள் கல்வி இதழ்களைப் படித்து , அதில் உள்ள தகவல்களைப் புரிந்துகொள்ள வேண்டும்.
- **செயல்முறைப்படுத்தவும்**கல்வி இதழில் உள்ள தகவல்களைத் தங்களது கற்பித்தல் முறைகளில் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும்.
- **பிற ஆசிரியர்களுடன் விவாதிக்கவும்:**கல்வி இதழில் உள்ள தகவல்களைப் பிற ஆசிரியர்களுடன் விவாதித்து, தங்கள் கருத்துகளைப் பகிர வேண்டும்.
- **விமர்சன ரீதியாக சிந்திக்கவும்:** கல்வி இதழில் உள்ள தகவல்களை விமர்சன ரீதியாக சிந்திக்க வேண்டும்.
- **தொடர்ச்சியாக கற்கவும்:** கல்வி இதழ்கள் மூலம் தொடர்ச்சியாக கல்வி பெற்று, தங்களது திறமைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

கல்வி இதழ்கள் மூலம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் திறன்களை மேம்படுத்துவது ஒரு பயனுள்ள முறையாகும். கல்வி இதழ்கள் ஆசிரியர்களுக்கு புதுமையான கற்பித்தல் முறைகள் , பாடத்திட்ட மாற்றங்கள் மற்றும் கல்வி ஆராய்ச்சி பற்றிய தகவல்களை வழங்குகின்றன , இது அவர்களின் திறன்களை மேம்படுத்த உதவுகிறது.

கல்வி இதழ்கள்" (Kalvi Ithazhalgal) என்றால் தமிழ் மொழியில்கல்வி தொடர்பான இதழ்கள்அல்லதுவார/மாத இதழ்கள்என்பதாகும். இவை பொதுவாக:

- மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான கட்டுரைகள்
- ஆசிரியர்களுக்கான பயிற்சிக் குறிப்புகள்
- புதிய பாடத்திட்டங்கள், தேர்வு தகவல்கள்
- கல்வி சம்பந்தப்பட்ட அறிவிப்பு, திட்டங்கள்
- தேர்வு தயாரிப்பு வழிகாட்டிகள் போன்றவற்றைக் கொண்டிருக்கும்.

**ஊஞ்சல் மற்றும் தேன்சிட்டு – தமிழக பள்ளிக் கல்வித் துறை**

தமிழக அரசு பள்ளிக் கல்வித் துறை வெளியிடும் இவ்விதழ்கள் , மாணவர்களுக்கு கல்வி மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் நோக்கில் தயாரிக்கப்படுகின்றன.12–10–2022 அன்றுவெளியிடப்பட்டது .

- ஊஞ்சல்:4 ஆம் மற்றும் 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு
- தேன்சிட்டு:6 ஆம் முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு
- **வெளியீடு**: மாதமிருமுறை.
- **உள்ளடக்கம்**: சிறுகதைகள், கவிதைகள், அறிவியல் கட்டுரைகள் . மாணவர்களின் படைப்புகள் , மற்றும் படங்களுடன் கூடிய கல்வி விளக்கங்கள், மற்றும், எனக்குப் பிடித்த கதை , எனக்குப் பிடித்த பாடல் , கதை மற்றும் ஓவியங்கள்,விடுகதைகள், சித்திரச்சோலை.
- **பக்கம்**–24
- **நோக்கம்**: மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை ஊக்குவித்து , படைப்பாற்றலை வளர்த்தல்.
- இணையதளம்:tnschools.gov.in







**ஊஞ்சல் இதழ்களைப் பெறுவதற்கான வழிகள்**

1. **Kalviseithiஇணையதளம்**: Kalviseithiதளத்தில் 'புது ஊஞ்சல்' மற்றும் 'தேன்சிட்டு' ஆகிய இதழ்களைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. **கல்வி அஞ்சல் (Kalvi Anjal) வலைப்பதிவு**: கல்வி அஞ்சல் வலைப்பதிவில் 'புது ஊஞ்சல்' இதழ்களின் பதிப்புகள் கிடைக்கின்றன.
3. **Asiriyar.net இணையதளம்**: இந்த தளத்தில் 'கனவு ஆசிரியர்', 'புது ஊஞ்சல்', மற்றும் 'தேன்சிட்டு' ஆகிய இதழ்களைப் பதிவிறக்கம் செய்யலாம்

**செயல்பாடுகள்**

'புது**ஊஞ்சல்**கல்வி இதழ் "( **PothuOonjal, March** 2025, **Issue** 55)மூலமாக**ஆசிரியர்களிடையே கல்வி சார்ந்த திறன்களை** எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதையும். இந்த இதழ் முலம் வாசிப்புத் திறன், எழுத்துத் திறன், சிந்தனைத் திறன் , சமூகத் திறன் மற்றும் படைப்பாற்றல் திறன்கள் எவ்வாறு மேம்படும். என்பதை செயல்பாடுகள் மூலம் காணலாம்.

**1. வாசிப்புத் திறனை மேம்படுத்துதல்**

**உதாரணம்**பக்கம் 22–23 இல் உள்ள சிறு கதை – *"The Bunny's Hat"*



# முயல்குட்டியின் தொப்பி

அந்த முயல் குட்டிக்கு தொப்பி அணிய ஆசை வந்தது. எல்லா இடங்களிலும் தேடியது. வயல் பக்கம் போய்த் தேடியது. எங்கும் கிடைக்கவில்லை. காரட் எடுக்கச் சென்றபோதுதான் அந்தத் தோட்டத்தில் பார்த்த பழைய பானை ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. உடனே ஓடிப்போய், அதனை எடுத்துத் தலையில் மாட்டிக்கொண்டது.

தன் கூட்டம் இருக்குமிடத்துக்கு வந்த அந்த முயல் குட்டி, "என் தொப்பி, நன்றாக உள்ளதா?" எனக் கேட்டது. மற்ற முயல்களெல்லாம் விழுந்து விழுந்து சிரித்தன. கூட்டத்தில் இருந்த ஒரு முயல் குட்டி, "அது தொப்பி இல்லை, பானை" என்று கிண்டல் செய்தது. அந்த முயல் குட்டிக்கு வருத்தமாகப் போய்விட்டது.

அப்போது ஒரு பெரிய முயல், "கவலைப்படாதே, குட்டி முயலே! அந்தப் பானையையே தலையில் வைத்துக்கொள். அது உனக்குத் தொப்பியாக இருக்கும்" என்று சொன்னது. பிறகு அனைவரும் பானைத் தொப்பியைப் பார்த்து கை தட்டி மகிழ்ந்தனர். முயல்குட்டியும் ரொம்ப மகிழ்ச்சியடைந்தது.

– பாபா

# The Bunny's Hat

The little bunny wanted to wear a hat. It searched everywhere. It looked around the fields but couldn't find one anywhere. Then, while going to pick some carrots, it suddenly remembered an old pot it had seen in the garden. It immediately ran, picked up the pot, and placed it on its head.

When the little bunny returned to its group, it asked, "How does my hat look?"

All the other bunnies burst into laughter. One of them teased, "That's not a hat, it's a pot!" The little bunny felt sad.

Just then, an older bunny said, "Don't worry, little one! Keep the pot on your head—it can be your hat!"

Everyone clapped and cheered for the bunny's pot-hat, and the little bunny felt very happy.

– Baba

Translated by Saranya

**செயல்பாடு:**

- கதையைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் படிக்கச் செய்யலாம்.
- கதையின் முடிவைப் பற்றிய கருத்தை எழுதச் சொல்லலாம்.
- கதையில் உள்ள புதிய சொற்களைப் பட்டியலாக எழுதி பொருள் சொல்லச் சொல்லலாம்.

**மேம்படும் திறன்கள்:** வாசிப்புத் திறன் புரிந்து கொள்ளும் திறன் , சொல்லாச்சித் திறன், இருமொழிகளிலும் புரிதல் திறன்.

**2. எழுத்துத் திறனைமேம்படுத்துதல்**

**செயல்பாடு:**

- "Bunny's Hat" கதைப்படி கதையின் முடிவை மாற்றி எழுதச் சொல்லல்.

- "நீங்கள் ஒரு நரி என்றால், நீங்கள் எந்த விதமான தொப்பியை அணிவீர்கள்?" என கற்பனை செய்து எழுதச் சொல்லல்.
- கதையின் அடிப்படையில் உரையாடல் எழுதச் சொல்லல்.

**மேம்படும் திறன்கள்:** படைப்பாற்றல், கட்டமைப்புடன் எழுதுதல், உரையாடல் வடிவில் எழுதுதல்.

**3. பரிசீலனை மற்றும் சிந்தனைத் திறன்**

**செயல்பாடு:**

- "அந்தக் காது ஒரு தொப்பியா இல்லையா?" என கலந்துரையாடல் நடத்தலாம்.
- "குழுவின் சிரிப்பு தவறா? சரியா?" என்று **மதிப்பீட்டுப் புள்ளிகள்** மூலம் விவாதிக்கச் சொல்லலாம்.
- கதையின் கதாபாத்திரங்களின் குணங்களின் அடிப்படையில் வகைப்படுத்தச் சொல்லலாம்: "உற்சாகம், வருத்தம், புரிதல்" போன்ற வகையில்.

**மேம்படும் திறன்கள்:** விமர்சன சிந்தனை, விசாரணை, தீர்வு தேடல்

**4. சமூக மற்றும் ஒத்துழைப்புத் திறன்**

**செயல்பாடு:**

- ""Bunny's Bunny" கதையை குழுவாக வாசித்து, ஒரு குழு **நாடகமாக** நிகழ்த்தலாம்.
- குழுவாக உரையாடி கதையைச் சுருக்கி எழுதச் செய்தல்.
- "கதையை வாசித்து பின் குழுவாக பிரசுரம் தயாரித்தல்" (Poster Presentation)

**மேம்படும் திறன்கள்:** குழுவாக பணியாற்றும் திறன், பொறுப்பு ஏற்பது, கருத்துப் பகிர்வு,

**5. படைப்புத் திறன் மற்றும் கற்பனைத் திறன் மேம்பாடு**

**செயல்பாடு:**

- ""Bunny's Hat" கதையை அடிப்படையாகக் கொண்டு **தொப்பி வடிவங்களை** வரைதல்.

- கதையை சுருக்கமாக **காமிக்ஸ்**அல்லது**கதைப் புத்தகமாக** உருவாக்கும் செயல்பாடு.
- "போட்டி": ஆசிரியர் வகுப்பில் சிறந்தத் தொப்பிக்குஅங்கீகாரம் அளித்தல்.

**மேம்படும் திறன்கள்:**கற்பனைத் திறன், கலைத் திறன் மேம்பாடு , காட்சிப்படுத்தும் திறன்

**மதிப்பீட்டு உத்திகள்:**

- **ருப்ரிக்**அடிப்படையிலான மதிப்பீடு (படைப்புத்திறன் , எழுத்துத் தெளிவு , குழு ஒத்துழைப்பு)
- **சொந்த இதழ்**தயாரிப்பு (தனியாக/குழுவாக )
- **வாசிப்புத் தினம்** : மாதத்திற்கொரு நாள் சிறுகதையை வாசித்தல் மற்றும் கலந்துரையாடல் செய்தல்.

**முடிவுரை:**

- மாத இதழ் "புது ஊஞ்சல்" போன்ற தமிழ்மொழி கல்வி இதழ்கள் மூலமாக மாணவர்களின்**பன்முக திறன்கள் மேம்படும்** , குறிப்பாக**மொழி**, **சிந்தனை**, **படைப்புத்திறன்**, மற்றும்**சமூக திறன்களைச்**சிறப்பாக மேம்படுத்திட முடியும்.
- இங்கே "புது **ஊஞ்சல்" கல்வி இதழ் (மார்ச் 2025, வெளியீடு** 55)அடிப்படையாகக் கொண்டு, **தமிழ் மொழியில் கல்வி சார்ந்த திறன்களை மேம்படுத்தும் பயிற்சி திட்டம்** கொடுக்கப்பட்டுள்ளது. இது **மூன்றாம் வகுப்பு மற்றும் நான்காம்வகுப்பு** மாணவர்களுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது.

**வகுப்பு பாடத்திட்டம் (Lesson Plan)**

**தலைப்பு:**

**"Bunny's Hat" கதையின் அடிப்படையில் மொழி மற்றும் அறிவாற்றல் திறன்கள் மேம்பாடு**

**பாடப்பிரிவு:**

தமிழ் மொழி (வாசிப்பு , எழுத்து , கலைப்பாடம் ஒருங்கிணைப்பு)

**நோக்கங்கள்:**

மாணவர்கள்

1. கதையை வாசித்து புரிந்து கொள்ள வேண்டும்
2. கதையின் கதாபாத்திரங்களைப் பகுத்தறிய வேண்டும்
3. கதை முடிவை மாற்றுதல்.
4. குழுவாக ஒரு சிறிய நாடகத்தை நடத்துதல்

**செயல்பாடுகள்**

| நிலை | செயல்பாடு | பயன்படும் திறன்கள் |
|---|---|---|
| **தொடக்கம்** (10 நிமி) | கதை வாசித்தல் (ஆசிரியர்/மாணவர் வாய்மொழியாக) | வாசித்தல் திறன் மேம்படும், கவனமாக கேட்கும் திறன் வளரும். |
| **நடுநிலை** (25 நிமி) | 1. கதை முடிவில் மாற்றம் , எழுதும் செயல்பாடு 2. குழுவாக கதையை நாடகமாக அமைத்தல் | எழுத்துத் திறன் , சிந்தனைத் திறன் , குழுவாக பணியாற்றும் திறன் |
| **முடிவில்** (10 நிமி) | நான் தங்கம் தொப்பி அணிந்திருந்தேன் என்றால்." என கற்பனை ஓவியம் வரையச் செய்யுதல் | படைப்பாற்றல், காட்சி வெளிப்பாடு |

**பயிற்சி திட்டம் (Training Plan – For Teachers)**

**தலைப்பு:தமிழ் கல்வி இதழ்களைப் பயின்று வகுப்பறையில் கல்வித் திறன்கள் வளர்த்தல்**

**பயிற்சியின் நோக்கம்:**

1. ஆசிரியர்கள் கல்வி இதழ்களில் உள்ள உள்ளடக்கங்களை வகுப்பறைக்குப் பொருத்தமாக மாற்றக் கற்றுக்கொள்வது
2. வாசிப்பு, எழுத்து, சிந்தனை, படைப்பாற்றல் ஆகிய திறன்களை ஒரே செயல்பாட்டில் ஒருங்கிணைக்கும் திறன்களைப் பெறுவது

**◈பயிற்சியின் கட்டமைப்பு:**

| அம்சம் | செயல்பாடு | விளக்கம் |
|---|---|---|
| **அறிமுகம்** | கல்வி இதழ்களின் | ஊஞ்சல்இதழ்களின், பயன்பாடுகள் |

| | | |
|---|---|---|
| | நோக்கம் | |
| **பயிற்சி 1** | கதையைவாசித்து வரிசைப்படுத்துதல் | வாசிப்பு, பரிசீலனை |
| **பயிற்சி 2** | கதை முடிவை மாற்றி குழுவாக நாடகம் நடத்துதல் | எழுத்து, ஒத்துழைப்பு |
| **பயிற்சி 3** | கதையின் அடிப்படையில் கலைப்பணி | கற்பனை, காட்சி திறன் |
| **முடிவு** | ஒவ்வொரு ஆசிரியரும் தங்களது சொந்த வகுப்பு பாடத்திட்டம் எழுதுதல் | செயல்முறை பயிற்சி |

**மதிப்பீடு:**

- ஆசிரியர் வகுப்பு பாடத் திட்டம் தயார் செய்தல்
- ஆசிரியர், கதை, நாடகம் நிகழ்த்துதல் மூலம் எழுதுதல் திறன் மேம்பாடு
- ஆசிரியர் கருத்து பகிர்வு

**1. தமிழ் மொழிப் பாடம் – "கதை வாசித்தல் மற்றும் மாற்றி எழுதுதல்"**

**நோக்கம்:**

- வாசித்தல் மற்றும் எழுத்துத் திறன்களை மேம்படுத்தல்
- கற்பனைத் திறன் மற்றும் உரைநடை எழுதும் திறன் வளர்த்தல்

**செயல்பாடுகள்:**

- ஊஞ்சல்இதழில் உள்ள கதையை மாணவர்கள் வாசித்தல்
- முடிவை மாற்றி எழுதுதல்
- கதையின் தொடக்கத்தை மாற்றிச் சொல்லுதல்

- உரைநடை எழுதும் பயிற்சி (எடுத்துக்காட்டாக "எனக்குப் பிடித்த கதாபாத்திரம் யார்?")

**திறன்கள்:**வாசித்தல் திறன் , எழுத்துத் திறன் , சிந்தனைத் திறன் , சொல்லாட்சித் திறன்,

**2. அறிவியல் – "விலங்குகளின் வாழ்க்கை முறை / உடல் அமைப்பு"**

**நோக்கம்:**

- கதையின் மூலமாக உயிரியல் பாட அறிவை அறிந்துக்கொள்ளுதல்.
- விலங்குகளின் உடல் உறுப்புகள், பழக்கவழக்கங்கள்

**செயல்பாடுகள்:**

- "The Bunny's Hat" கதையில் உள்ள முயல் பற்றிய விவரங்களை விவாதிக்கவும்
- முயலின் படத்தை ஓவியமாக வரையச் சொல்லவும்
- "முயலுக்கு ஏன் தொப்பி தேவை ?" என்ற கேள்வியின் அடிப்படையில் அறிவியல் காரணத்தை விவாதிக்கவும் (குளிர், பாதுகாப்பு)

**திறன்கள்:**அறிவியல் சிந்தனை, பகுப்பாய்வு, காட்சி விளக்கம்

**3. கணிதம் – "வடிவங்கள் மற்றும் அளவீடுகள்"**

**நோக்கம்:**

- அளவீடு, வடிவங்கள் மற்றும் பரிமாணம் பற்றிய புரிதல்

**செயல்பாடுகள்:**

- கதையில் வரும் " pot" மற்றும் " hat" போன்ற பொருட்களின்வடிவங்களை வரையச் சொல்லுதல்
- அதற்கான பரிமாணங்கள், விட்டம், உயரம் போன்றவற்றை விவாதித்தல்
- மாணவர்கள் தங்கள் சொந்த தொப்பியை வடிவமைத்து அளவீடுகளை எழுதுதல்.

**திறன்கள்:**கணித அறிவு மேம்படும், அளவிடுதல், வடிவ அறிவு திறன் மேம்படும்.

**4. சமூக அறிவியல் – "குழுவாக மற்றும் தனியாக"**

**நோக்கம்:**

- சமூக ஒழுக்கம், மரியாதை மற்றும் மனநிலை வளர்ச்சி

**செயல்பாடுகள்:**

- கதையின் அடிப்படையில் "பிறரை அலட்சியமாக விமர்சிப்பது சரியா ?" என கலந்துரையாடல்
- "வெறுப்பை எதிர்நோக்கும் விதம்" பற்றிய உரையாடல்
- ஒவ்வொருவருக்கும் தனித்துவம் இருக்க வேண்டும் என்ற கருத்தை விளக்குதல்

**திறன்கள்:**பரிசீலனை சிந்தனை, உணர்வுப் பகிர்வு, சமூகத்திறன்

**5. கலை மற்றும் கைவினை – "தொப்பி வடிவமைத்தல்"**

**நோக்கம்:**

- கற்பனைத் திறன், கைவினை உழைப்பு, வடிவமைப்புத் திறன்

**செயல்பாடுகள்:**

- கதை முடிவை அடிப்படையாகக் கொண்டு குழுவாக அல்லது தனிநபராக "Bunny's Hat" ஓவியம் வரையச் சொல்லுதல்
- வாசித்த கதையை அடிப்படையாகக் கொண்டு**காமிக்ஸ்**பக்கம் வரைதல்
- சுவரொட்டி வடிவமைத்தல் – "எனது பிரத்தியேகத் தொப்பி"

**திறன்கள்:**காட்சி சிந்தனை, கைவினை திறன், படைப்பாற்றல்

**மாணவர் செயல்பாட்டு மதிப்பீடு**

| **திறன்கள்** | **மிகச் சிறந்தது (4 மதிப்பெண்)** | **சிறந்தது ( 3 மதிப்பெண்)** | **சராசரி ( 2 மதிப்பெண்)** | **மேம்படுத்த வேண்டியது (1 மதிப்பெண்)** |
|---|---|---|---|---|
| **1படைப்புத்திறன் (Creativity)** | தனித்துவமான சிந்தனை; கற்பனை மிகுந்த வரையறைகள்; செயல்பாட்டில் நுட்பங்கள் | நல்ல சிந்தனை ; சில புதிய அம்சங்கள் உள்ளன; கற்பனைத் திறன் உள்ளது | அடிப்படை சிந்தனைகள் மட்டுமே ; புதுமை குறைவாக உள்ளது | புதுமை/கற்பனை இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் புதுமை தெளிவாக தெரிகின்றது | | | |
| **2. எழுத்துத் தெளிவு (Clarity in Writing)** | வாசிப்பதற்கு எளிதான சொல் தேர்வு; தெளிவான கட்டமைப்பு; இலக்கணப் பிழைகள் இல்லை | வாசிப்பதற்கு எளிமையானது; சில சிறிய பிழைகள் உள்ளன; கருத்து புரியும் வகையில் உள்ளது | கருத்து குழப்பமாக உள்ளது; அதிக பிழைகள் உள்ளன | வாசிக்க மிகக் கடினம்; முக்கிய கருத்துகள் புரியவில்லை |
| **3. குழு ஒத்துழைப்பு (Collaboration)** | அனைவரும் சமஅளவு பங்களிப்பு கொடுத்தனர்; குழுவாக திட்டமிட்டு செயல்பட்டனர்; ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தி கொண்டனர். | பெரும்பாலானவர்கள் பங்களித்தனர்; | சில உறுப்பினர்கள் மட்டுமே பங்களித்தனர்; குழு ஒத்துழைப்பு சீராக இல்லை | ஒருவரே செயல்பட்டார்; குழு ஒத்துழைப்பு இல்லை |
| | | | | |

**மாதிரி வகுப்புத்திட்டம் –தொப்பியும் தன்னம்பிக்கையும்**

◈**வகுப்பு:**5ஆம் வகுப்பு

◈**பாடப்பிரிவு:**தமிழ் மொழி + வாழ்க்கைத் திறன்கள் (Language + Life Skills)

◈**ஆதாரம்:**"**The Bunny's Hat**" (PothuOonjal March 2025)

**பாடத்தின் நோக்கங்கள்:**

மாணவர்கள்:

- கதையை வாசித்து , கதையின் ஒருகதாபாத்திரத்தின் குண நலன்களை விவரிக்க கற்றுக்கொள்வார்கள்.
- சொற்கள் மற்றும் வாக்கியங்களை சரியான முறையில் அமைக்க கற்றுக்கொள்வார்கள்.
- தன்னம்பிக்கை, குழுஒத்துழைப்பு, சமயோஜிதம் போன்ற வாழ்க்கைத் திறன்களை உணர்வார்கள்.
- ஒரு புது கதையை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவார்கள்.

**பயிற்சிக் கட்டமைப்பு:**

| **நிலை** | **செயல்பாடு** | **மாணவர் கல்வி திறன்கள்** |
|---|---|---|
| தொடக்கம் (10 நிமி) | ஆசிரியர் கதையைப் படித்து வாசிக்கிறார். மாணவர்கள் கதையை கேட்கிறார்கள். | பொருள் புரிந்து வாசித்தல், |
| செயல்முறை (20 நிமி) | "முயலுக்கு அந்த தொப்பி முக்கியமா?" என விவாதம் 2. "நான் அந்த முயலாக இருந்தால்..." என கற்பனை செய்து எழுதுதல் | சிந்தனை, எழுத்து, கற்பனை |
| கலைச் செயல்பாடு ( 10 நிமி) | தங்கள் சொந்த 'தொப்பி வடிவமைப்பை' வரைந்து , அதற்கான பெயரையும் எழுதுதல் | படைப்பாற்றல், காட்சி வெளிப்பாடு |
| முடிவில் (5 நிமி) | "தன்னம்பிக்கையுடன் | சமூகத் திறன் , |

| | | |
|---|---|---|
| | செயல்படுவது எப்படியென" குழு கருத்தாடல் | நேர்மையுடன் பகிர்ந்து கொள்வது |

**மேம்படுத்தும் தமிழ் மொழி சார்ந்த கல்வித் திறன்கள்:**

| **கல்வி திறன் வகை** | **செயல்பாட்டின் மூலம் மேம்படும் திறன்கள்** |
|---|---|
| வாசிப்புத் திறன் | ஆசிரியர் வாசிக்கும் கதையை முழுமனத்துடன் கேட்பது, முக்கிய கருத்துகளை அடையாளம் காண்பது |
| எழுத்துத் தெளிவு | நான் அந்த முயலாக இருந்தால்." போன்ற வாக்கியங்களைத் தெளிவாக எழுதும் பயிற்சி |
| கற்பனை மற்றும் படைப்புத்திறன் | தொப்பி வரைதல் மற்றும் புதிய கதையமைப்பு |
| வாழ்க்கைத் திறன்கள் | தன்னம்பிக்கை, குழுவோடு செயல்படும் திறன் , சமன்பாட்டுடன் பகிர்வு |

**கல்வி திறன்கள், செயல்பாடுகள் மற்றும் மதிப்பீட்டு ருப்ரிக்**

| **கல்வித் திறன்** | **செயல்பாட்டின் விளக்கம்** | **மேம்படும் திறன்கள்** | **மதிப்பீடு** |
|---|---|---|---|
| **1.புரிந்து கொண்டு வாசித்தல்.** | The Bunny's Hat" கதையை வாசித்தல் மற்றும் கேள்வி–பதில்கள் | முக்கியமான தகவல்களை அடையாளம் காணுதல் , கருத்தை தெளிவாகக் கூறுதல் | முழுமையான புரிதல்,<br>சிறிய தவறுகள்,<br>பாதிபுரிதல்,<br>கருத்து புரியாத நிலை, |
| **2.எழுத்துத்** | "நான் அந்த | உரையாடல், , கருத்தை | தெளிவான அமைப்பு , |

| | | | |
|---|---|---|---|
| **தெளிவு** | முயலாக இருந்தால்... " என்ற தலைப்பில் சொந்தக் கதை எழுதுதல் | கட்டமைத்தல் | இலக்கணம்செயல்பாடுகள் இல்லை,<br>சிறிய பிழைகள்,<br>அமைப்பில் குழப்பம்,<br>வாசிக்க முடியாத நிலை, |
| **3. படைப்பாற்றல்** | கதையின் அடிப்படையில் "தொப்பி வடிவமைத்தல்" ( Hat Design Drawing) | கற்பனை, காட்சி வடிவமைப்பு, தனித்துவம் | புதுமை, வடிவமைப்பில் தனிச்சிறப்பு,<br>அடிப்படை புதுமை,<br>குறைவான முயற்சி |
| **4.பரிசீலனை சிந்தனை** | "தொப்பி இல்லாமல் வாழ முடியாதா?" போன்ற கேள்விகள் குறித்து விவாதம் | தீர்வு நோக்கிய சிந்தனை, காரணம் சொல்லும் திறன் | ஆழமான பரிசீலனை,<br>தொடர்புடைய விளக்கங்கள்,<br>பொதுவான பதில்கள்,<br>கருத்து இல்லாமல் பதில், |
| **5. குழு ஒத்துழைப்பு** | குழுவாக கதையை நாடகமாக மேடைபடுத்தல் அல்லது | பொறுப்புடன் செயல்படுவதுகருத்து, கேட்பது மற்றும் பகிர்வது | அனைவரும் ஈடுபாட்டனர்,<br>சிறிய குழப்பங்கள்,<br>சிலரே செயல்பட்டனர்,<br>ஒத்துழைப்பு இல்லை, |

| | | | |
|---|---|---|---|
| | குழு விளக்கம் | | |

**மதிப்பீட்டு அட்டவணை**

| **மாணவர் பெயர்** | **வாசிப்பு (4)** | **எழுத்து (4)** | **படைப்பாற்றல் (4)** | **சிந்தனை (4)** | **ஒத்துழைப்பு (4)** | **மொத்தம் /20** | **கருத்து** |
|---|---|---|---|---|---|---|---|
| **ஆர் தினேஸ்** | 4 | 3 | 3 | 4 | 4 | 18 | நன்று |
| மு.காவியா | 4 | 3 | 4 | 4 | 4 | 19 | நன்று |
| ச.கண்மணி | 4 | 4 | 4 | 4 | 4 | 20 | நன்று |
| சுரேஷ் | 4 | 4 | 4 | 4 | 4 | 20 | நன்று |
| குமார் | 4 | 4 | 4 | 3 | 4 | 19 | நன்று |

**மாதிரி செயல்பாடு 1 – "வரைபடம் (Story Map)"**

**ஆதாரம்:*The Bunny's Hat* (pp. 22–23)**

**செயல்:**

- மாணவர்கள் கதையை வாசித்து , கீழ்க்கண்ட படிநிலைபடி **மனவரைபடம் தயாரிக்கவும்Story Map**:
  - கதையின் இடம் (Setting)
  - முக்கிய கதாப்பாத்திரம் (Character)
  - சிக்கல் (Problem)
  - தீர்வு (Solution)
  - முடிவு (Ending)

**மேம்படும் திறன்கள்:**

- வாசிப்புத் திறன்,
- புரிந்து கொள்லும் திறன்
- பகுப்பாய்வுத் திறன்

**மாதிரி செயல்பாடு 2 – "நகைச்சுவை விளம்பரம் எழுதுதல்"**

**ஆதாரம்: கதையின்தொப்பி (pot–hat) யோசனை**

**செயல்:**

- மாணவர்கள் குழுக்களாக பிரிந்து, "**நமது வித்தியாசமான தொப்பிகள்**" என்ற தலைப்பில்**விளம்பரத் துணுக்கு எழுத வேண்டும்**
- அதில்:
    - தொப்பிக்கு பெயர்
    - அதன் சிறப்புகள்
    - விற்பனை இடம் / விலை
    - ஒரு காட்சிப்படம் (drawing)

**மேம்படும் திறன்கள்:**

- படைப்பாற்றல்
- மொழிப்படைப்பு / விளக்கத் திறன்
- காட்சி வடிவமைப்பு (Visual design)
- சமூக ஒத்துழைப்பு

**மாதிரி செயல்பாடு 3 – "எனது சிறிய நாடகம்"**

**ஆதாரம்: கதையின் உரையாடல் (Dialogue)**

**செயல்:**

- மாணவர்கள் 3–4 பேர் குழுவாக **Bunny'sகதையை நாடகமாக காட்சிபடுத்த** வேண்டும்
- உரையாடல்களை தாங்களாகவே எழுதவும்
- ஒரு கதாநாயகன், ஒரு வர்ணிப்பவர், மற்றும் பிற கதாப்பாத்திரங்கள்

**மேம்படும் திறன்கள்:**

- உரைநடை எழுதும் திறன்
- உரையாடல் மற்றும் நகைச்சுவை உணர்வு

- குழுவோடு ஒத்துழைத்து செயல்படும் திறன்
- தன்னம்பிக்கை / மேடைப் பேச்சு

**மாணவர் பயிற்சித் தாள்**

**இதழ்**:புதுஊஞ்சல்–*மார்ச்2025*

**திறன்கள்**: வாசிப்புத் திறன், புரிந்து கொள்ளுதல் திறன், எழுத்துத் திறன், படைப்பு திறன்.

**பகுதி 1: கதையைப் படித்து விளக்கம் எழுதும் பகுதி**

**கதை**:முயலின் தொப்பி(பக்கம் 22)

**சரியான விடையைத் தேர்ந்தெடு**

அ. கோடிட்டஇடத்தைநிரப்புக.

1. முயல் தொப்பிக்காக __________ எல்லாம் தேடியது.
2. மற்ற முயல்கள் அதை பார்த்ததும் __________ விட்டன.
3. பெரிய முயல் வார்த்தைகளை கேட்டதும், முயல் __________ உணர்ந்தது.

**ஓரிருவரிகளில்விடையளி**

1. மற்ற முயல்கள் ஏன் சிரித்தன?
2. கதை முடிவில் முயல் எப்படி உணர்ந்தது?

**பகுதி 2: படைப்புப் பணிகள்**

நீங்கள் ஒரு வித்தியாசமான தொப்பி அணிய விரும்பினால் அது எப்படி இருக்கும்? வரையவும்.

**ஆ. சிறு கட்டுரை எழுதுக**

**தலைப்பு**: "எனது சிறந்த தொப்பி" – நீங்கள் வடிவமைக்க விரும்பும் தொப்பியைப் பற்றி எழுது.

**பகுதி 3: சொல் விளையாட்டு (பக்கம் 21)**

**அஎழுத்துகளை சரியான வார்த்தைகளாக அமை .**

1. SUN __________
2. SHEEP __________
3. GUN __________
4. JEEP __________

**ஆ. ஒத்தஒலிக்குறியசொற்களைஇணை**

- Run _____
- Sheep _____
- Fun _____
- Sleep _____

**பகுதி 4: கருத்தரங்கம் (Discussion)**

**வினா:**

ஒருவரது தோற்றத்தை வைத்து யாராவது ஏளனம் செய்வது சரியா ?

மற்றவர்களை காயப்படுத்தாமல் எப்படி நடப்பது என்பதை விவாதிக்கவும்.

**பகுதி 5: அறிவியல்&சுற்றுச்சூழல் – "தோட்டத்திலிருந்து தொப்பி"**

(தோட்டத்தில் முயல் தொப்பியாக பானையை பயன்படுத்திய சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு)

**திறன்கள்:**

**நுனுகி ஆராயும் திறன், பயன்பாடு திறன், சுற்றுச்சூழலை அறிதல்**

**செயல்பாடு:**

1. உங்கள் வீட்டில்/பள்ளியில் பயன்படாமல் இருக்கும் பொருட்களை பட்டியலிடுங்கள்.
2. அதைப் பயன்படுத்தி புதிய உபகரணமாக மாற்றக் கூடிய சிந்தனைத் திறன்களைஎழுதுங்கள்.

   உதாரணம்:

   - பழைய பாட்டில்→ நீர்ப்பாசனக் கருவி
   - பழைய பானை → முயலுக்குத் தொப்பி

**பகுதி 6: கலை&கைவினை – "என் தொப்பி வடிவமைப்பு"**

**திறன்கள்:**

- கற்பனை, கலையார்வம், தன்னம்பிக்கை

**செயல்பாடு:**

- மாணவர்கள் தாங்கள் வடிவமைக்கும் "வித்தியாசமான தொப்பி"யை வரைந்து, அதன் பயன்பாட்டை எழுத வேண்டும்.

- கலர் பேப்பர் , பழைய மழைக்குடை , துணி போன்றவற்றைப் பயன்படுத்தி தொப்பி உருவாக்க முடியும்.
- தொப்பியின் பெயருடன் ஒரு சிறு விளக்கம்.

**பகுதி 7: மொழி திறன் – பெ(Rhyming Words)**

(இதழில் உள்ள வார்த்தை விளையாட்டின் அடிப்படையில்)

**திறன்கள்:**

- ஒத்த ஓசையுடைய சொற்களைஅடையாளம் காணல்

**செயல்பாடு:**

1. கீழ்க்காணும் வார்த்தைகளுக்கான ஒத்த ஒலியைக் கண்டறியுங்கள்:
    - **Sun→ ______**
    - **Run→ ______**
    - **Jeep→ ______**
    - **Peep→ ______**
2. மாணவர்கள் தாங்கள் உருவாக்கும் இரண்டு புதிய ஒத்த ஒலியுடைய வார்த்தைகளை கண்டறி.

**பகுதி 8: உணர்வுகள்&மதிப்பீடு – "நாகரிகமுள்ள நடத்தை"**

(மற்ற முயல்களது ஏளனத்தை அடிப்படையாகக் கொண்டு)

**திறன்கள்:**

- சமூக உணர்வு, செம்மையான உரையாடல், நாகரிகம்

**செயல்பாடு:**

- "ஒருவரை பார்த்து சிரிப்பது சரியா ?" என்ற தலைப்பில் ஆசிரியர் மாணவர்களிடம் விவாதம் நடத்தலாம்.
- பின்னர், மாணவர்கள் "நான் ஒருவரைப் புரிந்துகொள்வது எப்படி?" என ஒரு சிறு உரை எழுதலாம்.
- இது அவர்களது ஒற்றுமை உணர்வையும் வளர்க்கும்.

**பகுதி 9: வினா–பதில்கள் – கதையின்படி (புரிந்து வாசித்தல்)**

**(பக்கம் 22 கதை அடிப்படையில்)**

| வினா | விடை (மாணவர் எழுத) |
|---|---|
| முயல் எதற்காக தோட்டத்திற்குச் சென்றது? | |
| முயலுக்கு தொப்பியாக வந்த பொருள் எது? | |
| பிற முயல்கள் எப்படி எதிர்வினை தெரிவித்தன? | |
| பெரிய முயல் என்ன சொன்னது? | |

**பகுதி 1: இணைச்சொல் சேர்**

**திறன்: சொல் ஒத்திசைவு சொல் துலக்கம்**

**செயல்பாடு:**

கீழே கொடுக்கப்பட்ட சொற்களுக்கு பொருத்தமான இணைச்சொற்களை எழுதுங்கள்:

| **சொல்** | **இணைச்சொல்** |
|---|---|
| தூங்குதல் | ___________ |
| சிரித்தல் | ___________ |
| ஓடுதல் | ___________ |
| விளையாட்டு | ___________ |

**பகுதி 2: படத்தின் அடிப்படையில் உரையாடல் எழுதுக**

**திறன்: கற்பனை, உரையாடல் அமைத்தல்**

**செயல்பாடு:**

ஒரு முயல் ஒரு பானையைத் தொப்பியாக அணிந்து மற்ற முயல்களுடன் பேசுகிறதென்று கற்பனை செய்து 4 வரிகளுக்கான உரையாடல் எழுதுங்கள்.

**உதாரணம்**:

முயல் 1: என் தொப்பி எப்படி இருக்கிறது?

முயல் 2: இது பானை மாதிரி தெரிகிறது!

முயல் 1: இது எனக்குப் பிடித்த "பாடி ஹேட்"!

முயல் 3: அருமை! உனக்கே தனி ஸ்டைல் இருக்கே!

**பகுதி 3: அடையாளம் காண் – வினாவுக்கு பதில் சொல்**

**திறன்:புரிந்து வாசித்தல், சொல் தேர்வு**

**செயல்பாடு:**

கீழே கொடுக்கப்பட்ட வாக்கியங்களைப் படித்து அதற்கேற்ப பொருத்தமான வார்த்தையை எழுதுங்கள்.

1. வெறும் வண்டியில் பயணம் செய்பவன் ________
   (விருப்பத்துடன்/அவசியமாக)
2. __________ என்றால் ஒருவருக்குச் சமரசம் செய்யும் பண்பே.
3. முயலின் "தொப்பி" உண்மையில் __________.
4. குழந்தைகள் சிரிப்பது ___________ உணர்வை தருகிறது.

**பகுதி 4: சிறுகதைக்குப் பெயர் தேர்வு**

**திறன்: புரிந்து வாசித்தல், தலைப்பு வினை**

**செயல்பாடு:**

முயலுக்குத் தொப்பி என்ற கதைக்கு 3 புதிய தலைப்புகளை மாணவர்கள் உருவாக்கவேண்டும்.

**உதாரணம்**:

1. முயலின் புதுமை
2. பானைதான் தொப்பி
3. சிரித்த பிறகு புரிந்தது

**பகுதி 5: புதிர் சொற்கள் / சொல் விளையாட்டு**

**திறன்: சொற்களைக் கண்டு பிடிக்கும் திறன்**

**செயல்பாடு:**

**புதிர்:**

1. ஓடும் போது என் பெயர்,

   என்னைக் காணும் இடம் மேய்ச்சல் திணை.

   நான் யார்? → __________

2. கண்ணில்லை, வாயில்லை,

   பல்லாயிரம் கால்கள்!

   இங்கு வரும் பேழை நான். →__________

**பகுதி 6: கட்டுரை எழுதுக**

**திறன்: எழுத்துத் திறன், கருத்து வெளிப்பாடு**

**செயல்பாடு:**

தலைப்பு:**"எனது வாசிப்பு அனுபவம்"**

– நீங்கள் படித்த ஒரு கதை அல்லது கவிதை உங்கள் மனதில் என்ன உணர்வுகளைத் தூண்டியது என்பதை 5 வரிகளில் எழுதுங்கள்.

**பகுதி 7: வினா –விடை வடிவம்**

**திறன்: புரிந்து வாசித்தல்**

**செயல்பாடு:**

முயலின் தொப்பி கதை மற்றும் இதழில் உள்ள மற்ற செய்திகளை அடிப்படையாகக் கொண்டு:

| **வினா** | **மாணவர் பதில் (எழுதுக)** |
|---|---|
| முயலுக்கு தொப்பியாக வந்த பொருள் எது? | …………………….. |
| மற்ற முயல்கள் எப்படி நடந்துகொண்டன? | …………………….. |
| பெரிய முயல் என்ன சொன்னது? | …………………….. |
| உங்களால் அந்த முயலை எப்படி ஊக்கப்படுத்தலாம்? | …………………….. |

**மாணவர்மொழித்திறன்பயிற்சித்தொகுப்பு**

**தொகுப்பு: புதுஊஞ்சல் – மார்ச் 2025 | வகுப்பு: நடுத்தரநிலை (4–8)**

**பகுதி 1: இணைச்சொல்சேர்**

கீழேகொடுக்கப்பட்டசொற்களுக்குபொருத்தமானஇணைச்சொற்களைஎழுதுங்கள்:

| சொல் | இணைச்சொல் |
|---|---|
| தூங்குதல் | |
| சிரித்தல் | |
| ஓடுதல் | |
| விளையாட்டு | |

**பகுதி 2: படத்தின்அடிப்படையில்உரையாடல்எழுதுக**

ஒருமுயல்ஒருபானையைத்தொப்பியாகஅணிந்துமற்றமுயல்களுடன்பேசுகிறதென்றுகற்பனைசெய்து 4 வரிகளுக்கானஉரையாடல்எழுதுங்கள்.

**பகுதி 3: வினாவுக்குபதில்சொல்**

கீழேகொடுக்கப்பட்டவாக்கியங்களைப்படித்துஅதற்கேற்பபொருத்தமானவார்த்தையைஎழுதுங்கள்.

1. வெறும்வண்டியில்பயணம்செய்பவன் ________

2. _________ என்றால்ஒருவருக்குச்சமரசம்செய்யும்பண்பே.

3. முயலின் "தொப்பி" உண்மையில் _________.

4. குழந்தைகள்சிரிப்பது _________ உணர்வைதருகிறது.

**பகுதி 4: சிறுகதைக்குப்பெயர்தேர்வுசெய்க**

"முயலுக்குத்தொப்பி" கதைக்குப்புதியதலைப்புகளை 3 உருவாக்கிஎழுதுங்கள்.

**பகுதி 5: புதிர்சொற்கள்**

1. ஓடும்போதுஎனும்பெயர், மேய்ச்சல்திணையில்என்இடம் – நான்யார்?

__________

2. கண்ணில்லை, வாயில்லை, பல்லாயிரம்கால்கள்! இங்குவரும்பேழைநான் –

__________

**பகுதி 6: கட்டுரை**

தலைப்பு: "எனதுவாசிப்புஅனுபவம்" – நீங்கள்படித்தஒருகதை/கவிதைபற்றி 5 வரிகளில்எழுதுங்கள்.

**பகுதி 7: வாசிப்புபுரிதல்**

| வினா | மாணவர்பதில் |
|---|---|
| முயலுக்குதொப்பியாகவந்தபொருள்எது? | |
| மற்றமுயல்கள்எப்படிநடந்துகொண்டன? | |
| பெரியமுயல்என்னசொன்னது? | |
| நீங்கள்முயலைஎப்படிஊக்கப்படுத்துவீர்கள்? | |

**தரவுகள் பகுப்பாய்வு**


சேகரித்ததரவுகள்அடிப்படையில், கல்விசார்இதழ்கள்பயன்பாடும்,கல்வி திறன்களிலும் மற்றும் படித்தல்திறன்களிலும்மேம்பட்டுஇருந்தனர்.

**அட்டவணை–1**

முன்தேர்வுமற்றும்பின்தேர்விலிருந்துபெறப்பட்டமதிப்பெண்கள்அட்டவணைப்படுத்தப்பட்டுபகுப்பாய்வுசெய்யப்பட்டன.


முன்தேர்வுமற்றும்பின்தேர்வுமதிப்பெண்சதவிகிதம்

| முன்தேர்வு | பின்தேர்வு |
|---|---|
| 63 % | 79% |



அட்டவணை –2

முன்தேர்வுபின்தேர்வுசராசரிமதிப்பெண்அனைத்துஆசிரியர்கள்வீதம்அட்டனைப்ப டுத்தப்பட்டுள்ளது




மேற்கண்டவரைபடம்முன்தேர்வைவிடபின்தேர்வில்தரப்புள்ளிஉயர்ந்துள்ளதுஎன்ப தைகாட்டுகிறது.

**கண்டுபிடிப்புகள்.**

- கல்விஇதழ்கள்ஆசிரியர்களின்கற்றல்உணர்வைதூண்டுகிறது
- புதியபுதியகற்பிக்கும்உத்திகளைஅறியஉதவுகிறது.
- தினமும்வாசிக்கும்பழக்கத்தைஏற்படுத்திக்கொள்ளவேண்டும்

**பரிந்துரைகள்**

- அச்சு மற்றும் டிஜிட்டல் வடிவங்களில் பல்வேறு கல்வி இதழ்களுக்கான அணுகலை ஆசிரியர்களுக்கு வழங்குதல்.
- இதழ்கள் உள்ளடக்கத்தை பாடத்திட்டம் ஒருங்கிணைப்பதில் வாய்ப்புவழங்குதல்.

ஆசிரியர்களுக்கு வகுப்பறையில் இதழ்கள் பயன்படுத்துவதற்கான வாய்ப்புஏற்படுத்துதல்.மற்றும் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ள ஆசிரியர்களிடையே வாய்ப்புவழங்குதல்.

- இதழ்கள் அடிப்படையிலான கற்பித்தல் உத்திகளின் செயல்திறனைக் கண்காணித்தல்.
- அனைத்து பள்ளி ஆசிரியர்களும், கல்விஇதழ்களை முழுமையாக படிக்க வகுப்பறையில் வாய்ப்பு ஏற்படுத்தி தர வேண்டும்.

**முடிவுரை**

நம்எண்ணங்களைபிறருக்குகடத்தவேண்டுமென்றால்மொழியைத்திறன்பட கையாளவேண்டும். அதற்காகதினமும்படிக்கும்பழக்கத்தைவளர்த்துக்கொள்ள வேண்டும். கல்விஇதழ்களில்வரும்கதை , கட்டுரைபடக்கதைகளை, படிக்கும்போது.எந்தஒருதகவல்களையும்பொருள்புரிந்துவிரைவாகபடிக்கும்திறன் களும்அதன்மூலம்கல்வித்திறன்களும் மேம்படும் . மேம்படுத்த முடியும்என்பதைபலசெயல்பாடுகள்மூலம்இவ்வாய்வுவிளக்குகிறது.

**பார்வைநூல்கள்**

பிரதாம் பாவுண்டேசன் பெங்களூர்

2.புதுஊஞ்சல்DSEசென்னை

3.தேன்சிட்டுDSEசென்னை

4. கனவு ஆசிரியர்DSEசென்னை

## இணைப்பு –1

**முன்தேர்வு / பின்தேர்வு**

1) நீங்கள் கல்விசார்ந்த இதழ்களை எங்கு அணுகுகிறீர்கள்?

அ) ஆன்லைன்ஆ) அச்சு வடிவம் இ) இரண்டும்ஈ) ஏதுமில்லை

2) கல்வி இதழ்களை நீங்கள் எத்தனை முறை வாங்குகிறீர்கள்?

அ) வாரம் ஒரு முறை ஆ) மாதம் ஒரு முறை இ) மாதம் இரு முறை ஈ) இல்லை

3) இதழ்களில் இடம்பெறும் கட்டுரைகளின் தன்மையை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்?

அ) அடிப்படை கருத்துடன் ஆ) மிகவும் மேம்படுத்தப்பட்ட கருத்துடன்

இ) மேலோட்டமாக ஈ) ஆழ்ந்த கருத்துடன்

4) கல்வி இதழ்களில் வரும் கட்டுரை தலைப்புகள் உங்கள் ஆசிரியர் பணிக்கும் மற்றும் மாணவர்களின் மேம்பாட்டிற்கும் பொருத்தமானவையாக உள்ளதா?

அ) மிகவும்பொருத்தம்ஆ) பகுதியளவுபொருத்தம்இ. முற்றிலும்பொருத்தம்ஈ. பொருத்தமில்லை

5) நீங்கள் எந்த வகையான கட்டுரைகளை அதிகம் வாசிக்கிறீர்கள்?

அ) அறிவியல்கட்டுரைஆ) வரலாற்றுகட்டுரைஇ) கணிதகட்டுரைஈ) மொழிகட்டுரை

6) நீங்கள் அதிகமாக மாணவர்களிடம்எடுத்துரைக்கும்தலைப்புகள் கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் உள்ளதா?

அ) படங்கள் ஆ. கட்டுரைகள்இ) குறுக்கெழுத்துபுதிர்கள் ஈ) விளையாட்டுப் புதிர்கள்

7) தங்கள்மாணவர்களின்எவ்வகையானபடைப்புகளைஅனுப்பிஉள்ளீர்?

அ) கதை ஆ) படம் இ) குறுக்கெழுத்துபுதிர் ஈ) ஏதுமில்லை

8) கல்வி இதழ்களை படிப்பதன் மூலம் என்னென்ன திறன்கள் வளர்கிறது?

அ) எழுதுதல் ஆ) வரைதல் இ) படைப்பாற்றல் ஈ) அனைத்தும்

9) கல்வி இதழ்கள் மூலம்பெற்றஏதேனும் புதிய கற்பித்தல் முறைகளை வகுப்பறையில் பின்பற்றுகிறீர்களா?.

அ) எப்பொழுதும் ஆ) ஓரளவுஇ) எப்பொழுதாவது ஈ.பயன்படுத்துவதில்லை.

10) வகுப்பறையில் பாடத்திட்டமிடல் மற்றும் கற்பித்தலுக்கு கல்வி இதழ்களை ஆதாரமாக பயன்படுத்துகிறீர்களா?

அ) கற்றல்கற்பித்தல்கருவிகள்தயாரிக்கஆ) கற்றல் கற்பித்தல் பணிக்காக இ) கற்றல் விளைவுகள் மேம்படுத்த ஈ) இவை அனைத்தும்.

11) கல்வி இதழ்களில் உள்ள கட்டுரைகள் மூலம் புதிய கற்பித்தல் அல்லது நுட்பங்களை வகுப்பறைகளில் செயல்படுத்துள்ளீர்களா ?

அ) கதை சொல்லல் ஆ) வினாடி வினா இ) வாசிக்க வைத்தல்ஈ) படம் வரைதல்.

12. முயல் என்ன அணிய விரும்பியது?

அ) செருப்புஆ) தொப்பி இ) கண்ணாடி ஈ) கழுத்துப்பட்டை

13. முடிவில் முயல் என்னைத் தொப்பியாக அணிந்தது?

அ) கிண்ணம் ஆ) பூ, இ) பானை ஈ) இலை

14. யார் முயலை உற்சாகப்படுத்தினார்?

அ) பூனை ஆ) மற்றொரு முயல் இ) பெரிய முயல் ஈ) தோட்டக்காரர்

15.தேன்சிட்டு இதழ் எந்த வகுப்பு மாணவர்களுக்கானது?

அ) 2,3 வகுப்பு மாணவர்களுக்கு ஆ) 4,5 வகுப்பு மாணவர்களுக்கு இ) 6,8 வகுப்பு மாணவர்களுக்கு ஈ) தெரியாது

### இணைப்பு 2 –

### செயலாராய்ச்சியின் புகைப்படங்கள் மற்றும் இடையிட்டு நிகழ்வுகள்